**அரச சேவைகள் நலன்புரி நிதியம் - 2019**
---------------------------------------------------------------------

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

அரச சேவைகள் நலன்புரி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1942 இன் 18 ஆம் இலக்க அரச சேவைகள் நலன்புரி நிதிய கட்டளைச் சட்டத்தின் (621 ஆம் அதிகாரம்) 24(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கவில்லை. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக்கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் போதியளவான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிதியத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக வருடாந்த கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் 2.4(சீ)(ii) இன் கீழ் நிதியத்திற்கு கிடைக்கும் பணம் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | விடயம் தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 1.5.3 தெளிவுபடுத்தப்படாத வேறுபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் மூலம் பல்வேறு அரச நிறுவனங்களினால் நிதியத்தின் வைப்புக் கணக்கிற்கு மேற்கொள்ளப்படும் வரவு மற்றும் செலவுகளில் இனங்காணப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்யும் வரையில் சீராக்கல் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த கணக்கின் வரவு மீதி ரூபா 29,807,957 ஆக இருந்ததுடன் அதற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் அம்மீதியானது ரூபா 24,517,312 ஆனமையினால் ரூபா 5,290,644 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தவறுதலாக வரவு பட்டோலையின் பிரகாரம் மீதியானது ரூபா 24,517,312 ஆக இருந்ததுடன் 1 முதல் 3 வருடங்கள் வரை ரூபா 641,083 தொகையும் 4 - 6 வருடங்கள் வரை ரூபா 22,205,371 தொகையும் 7 - 10 வருடங்கள் வரை ரூபா 1,543,715 தொகையும் 11 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 127,142 தொகையும் காணப்பட்டது.<br><br>நிறுவனத்திற்கு அவ்வவ்போது கடிதங்கள் மூலம் வரவு மீதியினை தீர்ப்பனவு செய்யுமாறு | வருடாந்த சீராக்கல் கணக்கின் மீதிகள் தனித்தனியாக குறித்த நிறுவனங்களுடன் இணக்கம் செய்து சரியாக கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அறிவிக்கப்பட்டதுடன் பல்வேறு நிறுவனங்களின் சிறந்த பதிலினை தெரிவித்திருக்க வில்லை. இது தொடர்பில் முகாமைத்துவ குழுவினாலும் கவனத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அரச கணக்குகள் திணைக்களத்தின் ஊடாக இது தொடர்பில் நடைமுறையொன்றினை பின்பற்றுவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த மீதி உறுதிப்படுத்தலுக்காக நிறுவனத்தில் பேணிச் செல்லப்படும் பட்டோலையில் பல வருடங்களுக்கு முன்பிருந்து பெறுமதியொன்று காண்பிக்கப்படுவதுடன் அது எமது சீராக்கல் கணக்கின் ஆரம்ப மீதி மற்றும் ஆரம்ப மீதியுடன் இணங்கவில்லை. இந்த மீதி தீர்க்கப்பட்டுள்ளதா போன்ற தகவல்கள் காணப்பட்டுள்ளதா தவறுகளை மேற்கொள்ளாது வரவு மீதியின் கீழ் தொடர்ந்தும் காண்பிக்கப்படுவதுடன் குறித்த தகவல்களை தேடுவதற்குரிய பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கட்டாய பங்களிப்புக் கணக்கு, தன்னார்வ பணக் கணக்கு, அரச பங்களிப்புக் பணக் கணக்கு | 68,246,168,683 | நிதியத்தின் பங்களிப்பாளர்களின் தகவல்களை பேணிச் செல்வதற்காக மீள் மயப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது உரிய முறையில் நடைமுறைப் | அரச சேவை நிதியத்திற்கு 8% மற்றும் 12% படியாக ஒவ்வொரு நிறுவனங்களினால் அனுப்பப்பட்ட பணத்தின் பெறுவனவு பதிவேட்டில் 8% மற்றும் 12% கொடுப்பனவுகள் தனித்தனியாக | நிதியத்தின் கீழ் பங்களிப்புச் செய்துள்ள பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட கணக்குகள் தொடர்பில் முறையான தரவுக் கட்டமைப் பொன்றினை |

| | | | |
|---|---|---|---|
| | படுத்தப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியான ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த பங்களிப்புக் கணக்கு மீதி தொடர்பில் தனிப்பட்ட கணக்குகள் பேணப்பட்டிராமை. | கொடுப்பனவு பதிவேட்டில் பதியப்படும். ஆண்டின் ஆரம்ப மீதிக்கு ஆண்டினுள் கிடைத்த பெறுவனவு களிலிருந்தான கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டு ஆண்டின் இலாப பங்குகள் சேர்ப்பதன் மூலம் கட்டாய பங்களிப்பு பணக் கணக்கின் அரச பங்களிப்பு கணக்கு மற்றும் சுயேட்சை பங்களிப்பு பணக் கணக்கின் மீதிகள் கணிப்பிடப்பட்டுள்ளன. | பேணுவதன் மூலம் மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்தப்பட வேண்டியமை |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1942 இன் அரச சேவைகள் நலன்புரி நிதிய கட்டளைச் சட்டத்தின் (621 அதிகாரம்) | | | |
| (i) (16)(ஆ) மற்றும் 20(ஆ) பிரிவுகள் | செயற்திறனின்மை, மோசடிகள் ஆகிய காரணத்தினால் பங்களிப்பாளர் ஒருவர் சேவை வறிதாக்கப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது நிதியத்தின் பங்களிப்பாளரொருவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் போது அரசின் ஊக்குவிப்பு பணம் தொடர்பில் கிடைக்கும் வட்டியுடன் அந்த பங்களிப்பாளரின் கணக்கிற்கு அரசினால் செலவு வைக்கப்பட்ட ஊக்குவிப்பு பணத்தின் அளவு நிதியத்தின் திரண்ட நிதியத்திற்கு மீண்டும் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டிற்கு உரிய ரூபா 318,660,995 தொகை செலுத்தப்படாத அரச ஊக்குவிப்பு பணம் மற்றும் வட்டியின் அட்டுறுவாக | அரச சேவை நலன்புரி அதிகாரச் சட்டத்தின் 20 மற்றும் 16 ஆம்பிரிவுகளின் கீழ் செலுத்த வேண்டிய அரச பங்களிப்புப் பணம் மற்றும் அதற்குரிய வட்டி 2018 ஆம் ஆண்டு வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட வேண்டிய பணம் 2020 ஆம் வருடத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசின் செலுத்தப்பாடத பங்களிப்புப் பணம் மற்றும் வட்டி ஆகியவற்றை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காணப்பட்டது. | | |
| (ii) | 25 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டும் நிறைவடைந்த பின்னர் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினால் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அங்கத்தவர் கணக்குகளிலுள்ள மீதிகளை பங்களிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச சேவைகள் நலன்புரி பிரிவிற்கான தகவல் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் தற்போது அங்கத்தவர் இலக்கம் பதிவு செய்தலினை வழிப்படுத்தும் முறைமையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. புதிய அங்கத்துவ கணக்கு மீதிகள் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறிவிப்பதற்கான நடைமுறையொன்றினை நிர்மாணிப்பதில் உள்ள பல்வேறு நடைமுறை சிக்கல்கள் காரணமாக தாமதமாகியுள்ளது. 2/2017 சுற்றறிக்யையின் பிரகாரம் நிறுவனத்தினால் அங்கத்தவர்களின் காசோலை விபரங்கள் கட்டமைப்பில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் தமது சுய விருப்பின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றில் அந்த விபரங்களை அனுப்புவதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் நிறுவனத்தினால் இந்த நடைமுறைக்காக நடைமுறைச்சாத்தியமான முறையில் பங்களித்துக் கொள்வதற்கு அறிவிக்கும் கடிதத்தின் மூலம் நேரடியாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 6,520,628,550 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் மிகையானது ரூபா 6,779,940,754 ஆகும். அதன் பிரகாரம் நிதிப் பெறுபெறுகளில் ரூபா 259,312,204 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த குறைவிற்கு முதலீட்டின் அடிப்படையிலான வட்டி வருமானம் ரூபா 257,693,038 இனால் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்தப்படாத 592 விண்ணப்பங்கள் காணப்பட்டதுடன் ஆண்டினுள் நிதியத்தின் அங்கத்தவர்களால் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 6,435 ஆகும். அவற்றில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 5,070 எண்ணிக்கையான விண்ணப்பங்களுக்காக ரூபா 708,893,693 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 434 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டினுள் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 6,453 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அவற்றுள் 5,070 விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆண்டின் யூலை – ஒக்தோபர் வரையிலும் சுமார் 700 இற்கு அண்மிய எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் ஒரு மாதத்தினுள் கிடைத்துள்ளது. இவ்வாறு கிடைத்த மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 6,000 இனை விஞ்சியிருந்த போதிலும், நிறுவனத்தின் கொடுப்பனவு ஆவணங்களினை தயாரிப்பதற்கு இணைப்பு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினை அதிகரித்திருக்கவில்லை. இந்த விண்ணப்பங்களிடையே குறைபாடுகளை கோருவதற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதனால் நலன்களை பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் நிலவும் குறைபாடுகளின் அடிப்படையில் அனைத்து விண்ணப்பங்களுக்கும் ஒரே தடவையில் கொடுப்பனவினை மேற்கொள்ள முடியாது எவ்வாறாயினும், பிரிவிற்கு கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஒப்பாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தற்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களில் நிலவும் குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கு அறிவுரை வழங்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் விண்ணப்பங்களை தாமதமின்றி கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |